
தின கனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 250 | 4 Pages | 8.4.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 250 | 4 பக்கங்கள் | 8.4.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரு நோய்**

**விளக்கம்:**
பிஎல்லாப் பொருளுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து பற்றுக் கெடுமாறு ஒழுகினால், சார்வதற்க்கு உரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையா.

# நாட்டு மக்களின் வீடுகளில் அடுப்பு எரிய வேண்டுமா? அல்லது அவர்களது வயிறு எரிய வேண்டுமா? மு.க.ஸ்டாலின் ஆவேசம்

சென்னை, ஏப்.8

முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பதிவில் கூறியதாவது:

நாட்டு மக்களின் வீடுகளில் அடுப்பு எரிய வேண்டுமா? அல்லது அவர்களது வயிறு எரிய வேண்டுமா?

"உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருந்தாலே போதும்" என்பது, மத்திய அரசுக்கு மிகவும் பொருந்தும்!

உலக அளவில் கச்சா எண்ணை விலை சரிந்துள்ள நிலையில், பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்காவிட்டாலும் பரவாயில்லை, விலையை ஏற்றாதீர்கள் எனக் கெஞ்சும் பரிதாப நிலைக்கு நாட்டு மக்களைத் தள்ளிவிட்டார்களே!?

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல், சமையல் கியாஸ் விலை உயர்வு அமைந்திருக்கிறது.

மக்களே...

அடாவடியாக விலையை உயர்த்தி விட்டு, தேர்தல் நெருங்கும் நேரத்தில் அதில் சிறு பகுதியைக் குறைத்து நாடகம் ஆடுவது




பா.ஜ.க.வின் வழக்கமாகிவிட்டது! இந்த நாடகத்தைப் பார்த்துப் பார்த்து நமக்கும் பழக்கமாகிவிட்டது!

மத்திய பா.ஜ.க அரசே...

தேர்தல் ஏதாவது வரும் வரை காத்திராமல், இந்த விலை உயர்வை உடனே திரும்பப் பெறுக!

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் போப் பிரான்சிஸ் பிரார்த்தனை



வாடிகன், ஏப்.8

கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸ்(88) கடந்த பிப்ரவரி 14ம் தேதி முதல் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார். ரோம் நகரின் ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு நுரையீரல் தொற்று மற்றும் நிமோனியா பாதிப்பு என்று மருத்துவமனை தெரிவித்திருந்தது. இதனால் 3 வாரங்களுக்கும் மேலாக மருத்துவமனையில் போப் பிரான்சிஸ் சிகிச்சை பெற்று வந்தார்.

ஒருமாதத்துக்கும் மேலாக சிகிச்சையில் இருந்த போப் ஆண்டவர் பிரான்சிஸ் நலம் பெற்று கடந்த மார்ச் 23ம் தேதி வாடிகன் திரும்பினார். இந்நிலையில் செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் நேற்று நடந்த ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனையில் போப் பிரான்சிஸ் கலந்து கொண்டார். சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த அவர், அங்கு குழுமியிருந்த மக்களை பார்த்து உற்சாகமாக கையசைத்தார். பின்னர் "அனைவருக்கும் ஞாயிற்றுக்கிழமை நல்வாழ்த்துகள்" என தெரிவித்தார்.

# ஏமனில் அமெரிக்கா வான் வழி தாக்குதல்: 2 பேர் பலி: 9 பேர் காயம்

துபாய், ஏப்.8

ஹமாஸ் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இதையடுத்து அதற்கு பழிவாங்கும் விதமாக செங்கடலில் செல்லும் படகுகள் மீது ஏமனில் உள்ள ஹவுதி போராளிகள் தாக்குதல் நடத்துகின்றனர். இதற்கு பதிலடியாக ஏமனில் உள்ள ஹவுதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை குறிவைத்து அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

டிரம்ப் அதிபராக பதவியேற்ற பின்னர் வணிக கப்பல்கள் மீதான தாக்குதலை நிறுத்தும்படி ஹவுதிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். இதன் பின்னர் கடந்த மாதம் 15ம் தேதி முதல் ஏமனில் 200 தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் மாளிகை தெரிவித்தது. இந்த தாக்குதலில் 69 பேர் பலியானதாக ஹவுதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், ஏமனில் ஒரு இடத்தில் கிட்டத்தட்ட 70 பேர் வரை குழுமியிருக்கும் கூட்டத்தினர் மீது டிரோன் தாக்குதல் நடத்திய வீடியோவைஅதிபர்டிரம்ப்எக்ஸ்வலைதளபக்கத்தில்பதிவிட்டுள்ளார். இதில் டிரோன் தாக்குதலில் அந்த பகுதியில் கரும்புகை எழுகிறது. தாக்குதல் நடந்த இடத்தில் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஹவுதி படையினர் என்று டிரம்ப் தெரிவித்துள்ளார். ஆனால் தாக்குதல் நடத்தப்பட்ட இடம் மற்றும் இதர விவரங்களை அவர் வெளியிடவில்லை.

# தமிழ்நாடு, உபி உள்ளிட்ட முக்கிய மாநிலங்களில் புதிய பாஜ தலைவர்கள்: அடுத்த ஓரிரு நாட்களில் அறிவிப்பு



புதுடெல்லி, ஏப்.8

தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட முக்கிய மாநிலங்களில் அடுத்த ஓரிரு நாட்களில் புதிய மாநில தலைவர்களை தேர்வு செய்து அறிவிக்க பாஜ திட்டமிட்டுள்ளதாக தகவல்கள்வெளியாகிஉள்ளன. பாஜ தேசிய தலைவர் ஜே.பி. நட்டாவுக்கு பதிலாக புதிய தலைவரை தேர்வு செய்ய கட்சி மேலிடம் முடிவுசெய்துள்ளது.இதற்காககட்சியின்அரசியலமைப்புசட்டத்தின்படி நாடு தழுவிய புதிய உறுப்பினர் சேர்க்கை கடந்த ஆண்டு செப்டம்பரில் தொடங்கியது. கட்சியின் விதிப்படி, புதிய தேசிய தலைவரை தேர்ந்தெடுக்க, குறைந்தபட்சம் பாதி அளவிலான மாநிலங்களில் புதிய தலைவர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

பாஜ கட்சியில் மொத்தம் 37 மாநில தலைவர்கள் பதவி உள்ளன. இதில் 19 மாநிலங்களில் புதிய தலைவர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதமே புதிய தேசிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், உபி, கர்நாடகா, மபி உள்ளிட்ட முக்கிய மாநிலங்களில் புதிய தலைவர்களை தேர்ந்தெடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால் இதுவரையிலும் புதிய தேசிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படாமல் உள்ளார். கட்சி மேலிடத்தில் ஒருமித்த கருத்தை உருவாக்குவதிலும், ஆர்எஸ்எஸ்சின் நம்பிக்கையை பெறுவதிலும் உள்ள செயல்முறை காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

உபி, மபியில் முறையே பூபேந்திர சிங், வி.டி.சர்மா ஆகியோருக்கு பதிலாக புதிய தலைவர்கள் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. கர்நாடகாவில் தற்போதைய தலைவர் விஜயேந்திராவை தொடர முடிவு செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இதுதவிர, குஜராத், ஒடிசா, பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய பல மாநிலங்களிலும் பாஜ இன்னும் புதிய தலைவர்களை தேர்வு செய்யவில்லை. இந்த நடவடிக்கைகள் இன்னும் ஓரிரு தினங்களில் முடிக்கப்படும் என்றும் அதைத் தொடர்ந்து அந்தந்த மாநில பாஜ தலைவர்கள் அறிவிக்கப்படுவார்கள் என்றும் கட்சியின் அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகி உள்ளன.

# காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி சட்டப்பேரவையில் கோரிக்கை



தமிழ்நாடு சட்டப்பேரவையில் வினாக்கள் விடை நேரத்தில் மாண்புமிகு மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்களிடம் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி வினாக்கள் விடைகள் நேரத்தில் கேள்வி எழுப்பினார்.

1) காரைக்குடி தொகுதிக்குட்பட்ட சருகணியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்.

2) காரைக்குடி தொகுதிக்குட்பட்ட கண்டனூர் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். ஆகிய இரண்டு இடங்களிலும் புதிதாக துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டும் என காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர்மாங்குடி கோரிக்கை வைத்தார்.

அதற்கு பதலளித்த மாண்புமிகு மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்அவர்கள், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கைகளில் சருகணியில் துணை மின் நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டதாகவும், கண்டனூரில் வரும் காலங்களில் தேவைகள் இருப்பின் துணைமின்நிலையம்அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்தார்கள்.



சென்னைசைதாப்பேட்டைபனகல்மாளிகைஅருகேமோடியின் தமிழக வருகையை முன்னிட்டு பாஜகவின் மக்கள் விரோத ஆட்சியை கண்டித்தும் சிறுபான்மை இன மக்களுக்கு எதிராகவும் அவர்களது உரிமைகளை பறிக்கின்ற வகையிலும் நேற்று நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட வக்பு வாரிய திருத்தச் சட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப் பெருந்தகை அவர்களின் தலைமையில் கருப்பு கொடியேந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு காங்கிரஸ் மாநிலத் தலைவர் செல்வப் பெருந்தகை தலைமை வகித்தார். பாசிதம்பரம்எம்பிஅவர்கள் கண்டனஉரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் சுமார் 500க்கும் மேற்பட்ட காங்கிரஸ் தொண்டர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக காங்கிரஸ் கட்சி மாநில பொதுக்குழு உறுப்பினர் வீர வாஞ்சிநாதன் நன்றி தெரிவித்தார்.

# தாராபுரம் மதரஸா மன்பஉல் ஹசனாத் அரசு உதவி பெறும் துவக்கப்பள்ளி 40ஆம் ஆண்டு விழா




திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மதரஸா மன்பஉல் ஹசனாத் அரசு உதவி பெறும் துவக்கப்பள்ளி 40ஆம் ஆண்டு விழா,பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. ஜனாப். எம்.முகம்மது அலி பள்ளித் தொடர்வாளர் தலைமை தாங்கினார்.

அதில், பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு போட்டிகள் நடந்தன. வெற்றி பெற்றவர்களுக்கு பிடிஎ.தலைவர் எ.எம்.ஜபருல்லாஹ் பரிசு வழங்கினார். அட்டவணைப்பள்ளி தலைவர், ஹாஜி. ஜீ.முகம்மது இப்ராஹிம்.முத்தவல்லி முன்னிலை வகித்தனர். பள்ளிப் பொறுப்பு தலைமை ஆசிரியை ஜசீமாபர்வீன் பள்ளி ஆண்டு அறிக்கை வாசித்தார். ஈரோடு மதரஸா இஸ்லாமிய பள்ளி ஓய்வுதலைமை ஆசிரியர்அனிபாசிறப்புரையாற்றினார்.

அட்டவணைப்பள்ளிஇமாம்மௌலானா. பி.மீரான்கனி,ஜமால் பள்ளிவாசல்மிஸ்பாஹி பேஷ் , மௌலானா.பேஷ்இமாம்,ஹஜரத் எ.அப்துல்லா ஹஸனீ மற்றும்ஆ சிரியர்கள், மாணவ, மாணவியரின் பெற்றோர்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்.

# வாலாஜாபாத் மேற்கு பகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா



காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் மேற்கு ஒன்றியம் சார்பில், ஒன்றிய தலைவர் திரு. எஸ். சார்லஸ் (ஏ) ஆல்பர்ட் அவர்களின் தலைமையில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

இந்தவிழாவில்சிறப்புஅழைப்பாளராகதமிழகவெற்றிக் கழகத்தின்காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர்திரு. SPK. தென்னரசு அவர்கள் கலந்து கொண்டு பந்தலின் சிறப்பாக துவங்கி வைத்தார்.

பொதுமக்களுக்கு தண்ணீர், மோர், தர்பூசணி, இளநீர், வெள்ளரிக்காய், ஜூஸ் மற்றும் காடன் துணிகள் ஆகியவை வழங்கப்பட்டன. குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு இது பெரும் நிவாரணமாக அமைந்தது.

இந்த விழாவில் ஒன்றியம், கிளை, வார்டு மற்றும் கழக நிர்வாகிகள் உற்சாகமாக பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் முழுமையான ஏற்பாடுகளை திரு. எஸ். சார்லஸ் (ஏ) ஆல்பர்ட், வாலாஜாபாத் மேற்கு ஒன்றிய தலைவர் அவர்கள் சிறப்பாக செய்து கொண்டுவந்தார்.




# உடுமலையில் சாலையின் நடுவே மின் கம்பங்கள் வாகனங்கள் செல்ல முடியாததால் அவதி



தனியார் பள்ளிகள் மூலம் இயக்கப்படும் 10க்கும் மேற்பட்ட பேருந்துகள், மாணவர்களை அழைத்துச் செல்வதற்காக யுகேசி நகருக்குள் வந்து செல்கின்றன. இது தவிர ஏராளமான இரு சக்கர வாகனங்கள், கார்கள் அதிகளவில் வந்து செல்லும் பகுதியாகவும் யுகேசி நகர் உள்ளது. இப்பகுதியில்சாலையின்நடுவேமின்கம்பங்கள் நடப்பட்டுள்ளதால், பள்ளிவாகனங்கள்உட்பட கனரக வாகனங்கள் எளிதாக சென்று திரும்ப முடியாத நிலை உள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இது குறித்து நகராட்சி கவுன்சிலர் அப்துல் கயூம் கூறும்போது, "நீண்ட காலமாக இருந்து வரும் இப்பிரச்சினை குறித்து நகராட்சிக்கும், மின்வாரியத் துக்கும் பலமுறை கோரிக்கை மனுக்கள் கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மின் கம்பங்கள் சாலையின் நடுவே உள்ளதால் பொதுப் போக்கு வரத்துக்கு கடுமையாக பாதிக்கிறது. எனவே சாலையின் நடுவே உள்ள மின் கம்பங்களை உடனடியாக அகற்றி, சாலையோரமாக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

தினகனி



## தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் கும்பாபிஷேகம் கோலாகலம்



தென்னகத்து காசி என்று அழைக்கப்படும்தென்தமிழகத்தில் பிரசித்தி பெற்ற தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் கும்பா பிஷேகம் இன்று (7ம் தேதி] கோலாகனமாக நடைபெற்றது. ராஜ கோபுரத்தில் உள்ள கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷே கத்தை, செல்வம் பட்டர் தலை மையிலான சிவாச்சாரியார்கள் 2 நடத்தி வைத்தனர். முன்னதாக, அதிகாலை 3:00 மணிக்கு விக் னேஸ்வர பூஜை, புண்யாகவாசனம் ஆறாம் காலயாகசாலை பூஜை, பரி வார பாக சாலை, பூர்ணாஹீதி, விநாயகர் முதலான பரிவார மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகம், நாடி சந்தனம், ஸ்பர்ஸாஹீதி, திரவ் பாஹீதி, மகா பூர்ணாஹீதி, யாத்ரா தானம், கடம் எழுந்தருளல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆட்சியர் கமல் கிஷோர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், காவல் துணை கண்காணிப்பாளர்தமிழினியன், தென்காசி எம்.பி., ராணி ஸ்ரீகுமார், எம்.எல்.ஏ.,க்கள் பழனிநாடார், ராஜா, தெற்கு மாவட்ட தி.மு.க., பொறுப்பாளர் ஜெயபாலன், அறங்காவலர் குழு தலைவர் பாலகிருஷ்ணன், ஆலங்குளம் ஒன்றிய தலைவர் திவ்யா மணிகண்டன், அரசு ஒப்பந்ததாரர் மணிகண்டன், ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், கூண்டைநகரதி.மு.க., செலாளர்கணேசன், இளைஞர் அணி சுப்பிர மணியன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஜே.கே.ரமேஷ், பொன் செல்வன், மேலகரம் பேரூர் தி.மு.க., செயலாளர் சுடலை, இகஞ்சி பேரூர் செயலாளர் முத் சையா, குற்றாலம் பேரூர் செயலா ளர் சங்கர் என்ற குட்டி, ஊராட்சிமன்ற தலைவர் டி. கே.பாண்டியன், கோவில் நிர்வாக அதிகாரி பொன்னி, அரசு வழக்கறிஞர்கள் வேலுசாமி, புகழேந்தி, முருகன், மேலகரம் பேரூராட்சி துணைத் தலைவர் ஜீவானந்தம், காங்கிரஸ் மாவட் பொதுச் செயலாளர் ஏ.ஜி.எம்.கணேசன், காங்கிரஸ் வட்டாரதலைவர்பெருமாள், நகர காங்கிரஸ் தலைவர் சிங்கக்குட்டி என்ற குமரேசன், நகர தலைவர் மாடசாமி ஜோதிடர், பொருளாளர்ஈஸ்வரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை

எஸ்.பி., அரவிந்த் அறிவுறுத்தல் படி, காவல் துணை கண்காணிப்பாளர்தமிழினியன் அவர்கள் தலைமையில் அனைத்து காவல்துறையினரும் சிறப்பாக பணியாற்றினர்

## மதிமு கழக முதன்மைச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ. பிறந்தநாள் விழா: மாபெரும் மாட்டுவண்டி எல்கைப்பந்தயம்



சிவகங்கை மாவட்ட மதிமுக சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்துரைவைகோ பிறந்தநாளைமுன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கைப்பந்தயம் நடைபெற்றது.

இதில் புதுக்கோட்டை திண்டுக்கல் மதுரை சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்தும் மாட்டுவண்டிகள் பங்கேற்றன.

வெற்றி பெற்ற மாட்டுவண்டிகள் மற்றும் சாரதிகளுக்கு பரிசுகளை பொருளாளர் செந்திலதிபன், மேனாள் அமைச்சர் முகவை தென்னவன் சார்பாக திமுக மாமன்ற உறுப்பினர்கள் சித்திக், கார்த்திக், மாவட்ட பொருளாளர் சார்லஸ், நகர்க்கழக மதிமுக செயலாளர் வழக்கறிஞர் தீபன் சக்கரவர்த்தி ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் தலைமைக்கழக, மாவட்ட, நகர, ஒன்றியக்கழக நிர்வாகிகள் ஏர்ளமானோர் கலந்து கொண்டனர்..

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாவட்ட மதிமுக செயலாளர் பசும்பொன் மனோகரன் சிறப்பாக செய்திருந்தார்...

## காதல் தோல்வி பெண் காவலர் தூக்கிட்டு தற்கொலை



தஞ்சாவூர், ஏப்.8

திருவாரூர் மாவட்டம் சேந்தமங்கலத்தை சேர்ந்த பழனிவேல் மகள் காவேரி செல்வி (24). 2023ல் காவல்துறையில் சேர்ந்த இவர், கடந்த இரண்டு ஆண்டுகளாக தஞ்சாவூர் ஆயுதப்படை போலீஸ்காரராக பணியாற்றி வந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பணியை முடித்த காவேரி செல்வி, தெற்கு காவலர் குடியிருப்பு வீட்டிற்கு வந்தார். நேற்று காலை நீண்ட நேரமாகியும் வீட்டின் கதவு திறக்கப்படாமல் இருந்தது.

இதில் சந்தேகப்பட்ட பக்கத்துவீட்டுக்காரர்கள், தெற்கு காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். அதன்பேரில் போலீசார் அங்கு சென்று பார்த்த போது உள்பக்கம் கதவு தாழ்ப்பாள் போடப்பட்டு இருந்தது. கதவை உடைத்து பார்த்த போது அங்கு காவேரி செல்வி தனது துப்பட்டாவில், தூக்கில் சடலமாக தொங்கியது தெரிய வந்தது. போலீசார்நடத்தியமுதல் கட்ட விசாரணையில், காவேரி செல்வி காதல் தோல்வியால் தற்கொலை செய்து கொண்டது தெரியவந்துள்ளது. தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

## வக்பு சட்ட திருத்தத்தை எதிர்த்து மாவட்ட தலைநகரங்களில் நாளை ஆர்ப்பாட்டம்: முத்தரசன் அறிவிப்பு



சேலம். ஏப்.8

வக்புசட்டதிருத்தத்தை எதிர்த்து மாவட்ட தலை நகரங்களில் 9ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று முத்தரசன் தெரிவித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாடுக்கான ஆலோசனை கூட்டம் நேற்று சேலத்தில் நடந்தது. இதில் பங்கேற்ற மாநில செயலாளர் முத்தரசன் அளித்த பேட்டி: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாடு சேலம் மாநகரில் ஆகஸ்ட் 15,16,17 மற்றும் 18ம் தேதிகளில் நடக்கிறது.

இஸ்லாமியர்களுக்கு எதிராக ஒன்றிய அரசு கொண்டுவந்த வக்பு வாரிய திருத்த சட்டத்தை எதிர்த்தும், பாஜ அரசை கண்டித்தும் வரும் 9ம்தேதி மாவட்ட தலை நகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. பிரதமர் மோடி இலங்கைக்கு சென்றார். கச்சத்தீவை ஒப்படைக்கும்படி மோடி பேசினாரா? அதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்தினாரா? என்பதை விளக்க வேண்டும். அதிமுகவை கூட்டணியில் சேர்க்க பாஜவினர் மிரட்டல் விடுகின்றனர். யாரிடமும் எதுவும் சொல்லாமல் எடப்பாடி பழனிசாமி, அமித்ஷாவை சென்று சந்தித்துள்ளார்.

தொடர்ந்து, செங்கோட்டையன் மதுரையில்இருந்துசுரங்கபாதை வழியாக டெல்லிக்கு சென்று அமித்ஷா, நிர்மலா சீதாராமனை சந்தித்து பேசுகிறார். பின்னர்தம்பிதுரை,சண்முகம் பேசுகின்றனர். எப்படியாவது அவர்களை தங்கள் வசம் கொண்டு வர வேண்டும் என்ற மிரட்டல் தொனியில் பாஜ செயல்பட்டு வருகிறது. எடப்பாடி பழனிசாமி மீது வழக்கு, அவரது சம்பந்தி மீது வழக்கு, அவர் மகன் மீது வழக்கு, அதிமுக பெயரில் வழக்கு, இரட்டை இலை மீது வழக்கு என உள்ளது. இதனை வைத்து பாஜ தலைமை எடப்பாடியை மிரட்டுகிறது. இவ்வாறு முத்தரசன் தெரிவித்தார்.

## 12 இடங்களில் நடந்த சோதனையை தொடர்ந்து வைகுண்டராஜன், குடும்பத்தினர் மீது சிபிஐ வழக்கு

நெல்லை, ஏப்.8

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் அளவுக்கு மீறி தாதுமணல் அள்ளிய விவகாரத்தை தொடர்ந்து 2013ம் ஆண்டு செப்.17ம் தேதி தாது மணல் அள்ள தடை விதித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது. அதன் பிறகும் விவி மினரல்ஸ் நிறுவனம் தாது மணலை சட்ட விரோதமாக ஏற்றுமதி செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த விவகாரம்தொடர்பாகசென்னை ஐகோர்ட் விசாரணை நடத்தி வருகிறது.

இதில் தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்த மனுவில், 'சட்ட விரோதமாக தாதுமணல் எடுப்பது தொடர்பான புகார்களின் அடிப்படையில், 2013ம் ஆண்டு முதல் அதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும்' தெரிவிக்கப்பட்டது.சட்ட விரோதமாக எடுக்கப்பட்ட தாது மணல் இழப்பை ஈடுகட்டும் வகையில் ரூ.5832 கோடியை தனியார் தாது மணல் ஏற்றுமதியாளர்களிடம் இருந்து வசூலிக்க முடிவு செய்யப்பட்டது.

ஐகோர்ட்டில் கடந்த டிசம்பர் மாதம் தாது மணல்விவகாரம்தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். எம்.சுப்பிரமணியம், நீதிபதி ஜோதிராமன் அமர்வில் விசாரணை நடந்தது. இதில் நெல்லை மாவட்ட நிர்வாகம், வி.வி மினரல், பீச் மினரல் கம்பெனி, டிரான்ஸ் வேர்ல்டு நிறுவனம் உள்ளிட்ட 6 நிறுவனங்கள் 60 நாட்களுக்குள் ரூ.3528 கோடி அபராதம் செலுத்த உத்தரவிடப்பட்டிருப்பதாக தெரிவித்தது.

இதில் வி.வி.மினரல்ஸ், பீச் மினரல்ஸ், இன்டஸ்ட்ரியல் மினரல்ஸ் ஆகிய நிறுவனங்கள் வைகுண்டராஜன் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு சொந்தமானவை. இதனை எதிர்த்து தாது மணல் ஆலை உரிமையாளர்கள், சென்னை ஐகோர்ட்டில் முறையிட்ட நிலையில் இது தொடர்பான விரிவானவிசாரணையை நீதிமன்றம் நடத்தி வருகிறது.

இந்நிலையில் நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே கீரைக்காரன் தட்டு கிராமத்தில் உள்ள தாது மணல் ஆலைகளின் தலைமை அலுவலகமான விவி மினரல்ஸ், ஐஎம்சி, பிஎம்சி நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் சிபிஐ அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர். இதனைதொடர்ந்து விவி வைகுண்டராஜன், அவரது மனைவி, அவரது சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர் உள்ளிட்டோர் மீது 9 பிரிவுகளுக்கு மேல் சிபிஐ வழக்கு பதிவு செய்துள்ளது.

## புதுக்கோட்டை அருகே தண்ணீர் பேரலில் அமுக்கி 6 மாத குழந்தை கொலை

புதுக்கோட்டை, ஏப்.8

புதுக்கோட்டை அருகே தண்ணீர் பேரலில் அமுக்கி 6 மாத குழந்தை கொலை செய்யப்பட்டது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அருகே குளவாய்பட்டியை சேர்ந்தவர் மணிகண்டன் (29). இவரது மனைவி லாவண்யா(21). இவர்களுக்கு திருமணமாகி ஒன்றரை ஆண்டுகளாகிறது. 6 மாதத்தில் ஆதிரன் என்ற ஆண் குழந்தை உள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் ஒரு பைனான்சில் வேலை பார்த்து வரும் மணிகண்டன், அவ்வப்போது விடுமுறைக்கு ஊருக்கு வந்து செல்வது வழக்கம். அப்போது தம்பதி இடையே தகராறு இருந்து வந்தது.

இந்நிலையில் வேலைக்கு சென்ற மணிகண்டன் கடந்த 2 மாதத்துக்கு முன் ஊருக்கு வந்தார். அப்போது தம்பதி இடையே ஏற்பட்ட தகராறில் கணவருடன் கோபித்துக்கொண்டு லாவண்யா பக்கத்து கிராமமான புலியூரில் உள்ள தந்தை வீட்டுக்கு குழந்தையுடன் வந்து விட்டார். மணிகண்டன் வீடியோ கால் செய்தால் குழந்தையை மட்டும் காண்பித்துவிட்டு போனை உடனே துண்டித்து விடுவார் என கூறப்படுகிறது.

இந்நிலையில் லாவண்யா நேற்று அதிகாலை 3 மணியளவில் வீட்டிற்கு வெளியில் பாத்ரூம் சென்றபோது மர்ம நபர்கள் இரண்டு பேர், சத்தம் போடாமல் இருக்க அவரது வாயில் துணியை வைத்து அமுக்கியதோடு அவரது கழுத்தில் அணிந்திருந்த இரண்டு பவுன் தங்க செயினை பறித்துக் கொண்டும், வீட்டிற்குள் தூங்கி கொண்டிருந்த குழந்தை ஆதிரனை தூக்கிக்கொண்டும் சென்று விட்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து லாவண்யா, அவரது தந்தை சுப்பிரமணியன், தாயார் பொன்னரும்பு மற்றும் உறவினர்கள் குழந்தையை தேடியுள்ளனர். பின்னர் ஒரு மணி நேரம் கழித்து வீட்டிற்கு வெளியில் உள்ள தண்ணீர்பேரலில் ஆதிரன் சடலமாக மிதந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்தனர். தகவலறிந்து வந்த மணிகண்டனின் தந்தை குமார் மற்றும் தாயார் பேரனை மருமகள் லாவண்யா தான் தண்ணீர் பேரலில் அமுக்கி கொலை செய்து விட்டார் என கதறி அழுதனர்.

தகவலின்படி கீரனூர் போலீசார் குழந்தையின் தாய் லாவண்யா, அவரது தந்தை சுப்பிரமணியன், தாய் பொன்னரும்பு ஆகிய மூன்று பேரையும் பிடித்து விசாரித்து வருகின்றனர்.

இதுகுறித்து போலீசார் கூறுகையில், 'தம்பதி இடையே ஏற்பட்ட தகராறில் கணவரை பிரிந்து அவரது பெற்றோர் வீட்டில் வசித்து வரும் லாவண்யாவே அவரது குழந்தையை கொலை செய்து விட்டு நாடகம் ஆடுகிறாரா அல்லது வீட்டிற்கு வந்த மர்ம நபர்கள், லாவண்யா கழுத்தில் கிடந்த நகையை பறித்துக்கொண்டு ஆத்திரத்தில் குழந்தையை தண்ணீர் பேரலில் அமுக்கி கொலை செய்து விட்டு சென்றார்களா என்ற கோணத்தில் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது என்றனர்.

தண்ணீர்பேரலில் மர்மமான முறையில் சடலமாக கிடந்த 6 மாத குழந்தை ஆதிரனுக்கு கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு மருந்து கொடுக்கும்போது உடல் நிலை பிரச்னை ஏற்பட்டுள்ளது.

இதனால் திருச்சியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதித்து ரூ.5 லட்சத்திற்கு மேல் செலவு செய்து குழந்தையை காப்பாற்றி வீட்டுக்கு கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளராக கேரளாவை சேர்ந்த எம்.ஏ.பேபி தேர்வு: மதுரையில் நடந்த மாநாடு நிறைவு



மதுரை, ஏப்.8

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளராக கேரளாவைச் சேர்ந்த எம்.ஏ.பேபி தேர்வு செய்யப்பட்டுள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு மதுரை தமுக்கம் மைதானத்தில் கடந்த 2ம் தேதி துவங்கி நேற்று வரை நடந்தது. இறுதிநாளான நேற்று நடந்த பொலிட் பீரோ கூட்டத்தில் கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவரும், பொலிட் பீரோ உறுப்பினருமான எம்.ஏ.பேபி (71) கட்சியின் 6வது பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். பின்னர் எம்.ஏ.பேபி பேசியதாவது: மாநாட்டில் 18 அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மாநாட்டில் கட்சியின் அரசியல் இலக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது பெரும் இக்கட்டான சூழலில் நாடு உள்ளது. ஆர்எஸ்எஸ், பாஜ, பெரு நிறுவனங்கள் மற்றும் வகுப்பு வாத சக்திகள் கூட்டாக இணைந்து, மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நரேந்திர மோடி, அமித்ஷாமற்றும் ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத் ஆகியோர்நாட்டின்அனைத்து செயல்பாடுகளையும் தீர்மானிக்கும் சக்திகளாக உள்ளனர்.

24வது அகில இந்திய மாநாடு நாட்டில் ஆட்சியில் உள்ள பாஜவின் நவ பாசிச கொள்கைகளுக்கு எதிரான போராட்டத்தைநடத்த உறுதி பூண்டுள்ளது. பாஜ அனைத்து துறைகளிலும் ஊடுருவி ஜனநாயகத்தை முடக்கியுள்ளது. 'எம்புரான்' படத்தின் மீதான தடையை இதற்கு உதாரணமாக கூறலாம். ஆர்எஸ்எஸ், பாஜ கொள்கைக்கு எதிராக நாடு முழுவதும் உள்ள இடதுசாரி கட்சிகள், ஜனநாயக மதச்சார்பற்ற சக்திகளை ஓரணியில் திரட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது. நாட்டில் ஒருமைப்பாடு, மதச்சார்பற்றதன்மையை பாதுகாக்கும் போராட்டத்தில் ஜனநாயக மதச்சார்பற்ற சக்திகள் திரள வேண்டுமென மாநாடு அறைகூவல்விடுக்கிறது. இவ்வாறு பேசினார்.

பேரணி: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநாட்டின் கடைசி நாளான நேற்று மதுரை ரிங்ரோட்டில் உள்ள மஸ்தான்பட்டியில் பொதுக்கூட்டம் நடந்தது. முன்னதாக பாண்டிகோவில் சாலையிலிருந்து மாநாட்டு திடல் வரை பேரணி நடந்தது. அதில், கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானாஉள்ளிட்டநாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்களில் வந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை வந்த வேன் மோதி 2 பேர் பலி





ஆம்பூர், ஏப்.8

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் கிருஷ்ணாபுரத்தை சேர்ந்தவர் டெல்லிபாபு(62). இவர் நேற்று மதியம் ஆம்பூர் அடுத்த புதுகோவிந்தாபுரத்தில் உறவினர் வீட்டு துக்க நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு, அதே பகுதியை சேர்ந்த பழனி(62) என்பவருடன் ஆம்பூருக்கு இருசக்கர வாகனத்தில் புறப்பட்டார். கோவிந்தாபுரத்தில் இருந்து சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைக்கு வந்தபோது, கோவையில் இருந்து சென்னைக்கு வந்த சரக்குவேன், டூவீலரில் மோதியதில் டெல்லிபாபு சம்பவ இடத்திலும், பழனி மருத்துவமனையிலும் இறந்தனர்.

## வேளாண் துறையில் வளர்ச்சியையும் விவசாயிகளின் வருவாயையும் அரசு அதிகரிக்க வேண்டும்: அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்



அசென்னை, ஏப்.8

வேளாண் துறையில் வளர்ச்சியையும் விவசாயிகளின் வருவாயையும் அரசு அதிகரிக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தி உள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாட்டின் பொருளாதாரம் 202425ம் ஆண்டில் 9.69 சதவீதம் வளர்ச்சியடைந்திருக்கிறது. இது மகிழ்ச்சியும், மன நிறைவும் அளிக்கக் கூடியதுதான் என்றாலும், வேளாண் துறையின் வளர்ச்சி வெறும் 0.15 சதவீதம் ஆக குறைந்திருப்பது மிகவும் கவலையளிக்கிறது.

அடிப்படையில் வேளாண்மையை சார்ந்த மாநிலமான தமிழ்நாடு, விவசாயிகள் முன்னேறாமல் முன்னேற முடியாது என்ற உண்மையை அறிந்திருந்தும் வேளாண் வளர்ச்சிக்காக முன்னோக்கு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு இதுவரை எடுக்காதது வருத்தம் அளிக்கிறது. நெல்லுக்கான கொள்முதல் விதையை குண்டாலுக்கு ரூ.3,500ஆக உயர்த்த வேண்டும்; கரும்புக்கான கொள்முதல் விலையை டன்னுக்கு 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று பாமக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனால், இதில் 60 விழுக்காடு அளவுக்கு மட்டும் தான் கொள்முதல் விலை வழங்கப்படுகிறது. உழவர்களின் சுமையைப்போக்க ஆண்டுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் இடுபொருள் மானியம் வழங்கப்பட வேண்டும் என்று பாமக வலியுறுத்தி வருகிறது. அந்தக் கோரிக்கையும் இன்றுவரை ஏற்கப்படவில்லை. வேளாண் துறை வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டு அதற்கான சிறப்புத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும்.

அதற்காக அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும் நியாயமான கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். உழவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.10,000 வீதம் இடுபொருள் மானியம் வழங்கப்பட வேண்டும். இவை அனைத்திற்கும் மேலாக, வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்தல், குளிர்ப்பதனக் கிடங்குகள் அமைத்தல் போன்றவற்றுக்காக அதிக அளவில் முதலீடுகள் செய்யப்பட வேண்டும். அதன் மூலம் வேளாண் துறை வளர்ச்சியையும், உழவர்களின் வருவாயையும் அரசு அதிகரிக்க வேண்டும்.

# செல்வாக்கு இல்லாத செங்கோட்டையனை பற்றி பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை: வைகைச்செல்வன் பேட்டி



சென்னை, ஏப்.8

செல்வாக்கு இல்லாத செங்கோட்டையனை பற்றி பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. அவர் குறித்து பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி விரைவில் பேசுவார் என அதிமுக முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன் கூறினார். காஞ்சிபுரம் மாவட்ட அதிமுக சார்பில், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும், அதிமுக செய்தி தொடர்பாளருமான வைகைச் செல்வன் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய வைகைச் செல்வன், செல்வாக்கு இல்லாத செங்கோட்டையனை பற்றி பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. செங்கோட்டையன் குறித்து விரைவில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசுவார். அதிமுகவில் எந்த ஒரு உள்கட்சி பிரச்னையும் இல்லை. சில சலசலப்புக்கெல்லாம் அஞ்சுகிற கட்சி அதிமுக இல்லை. பல சோதனைகள் வந்தாலும் மேலே எழுகிற கட்சி தான் அதிமுக' என்றார்.

கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் வி.சோமசுந்தரம் தலைமை தாங்கினார். அதிமுக அமைப்பு செயலாளர் வாலாஜாபாத் கணேசன், மாவட்ட பொருளாளர் வள்ளிநாயகம், அம்மா பேரவை மாவட்ட செயலாளர் சோமசுந்தரம், ஒன்றிய செயலாளர் ஜீவானந்தம், மாவட்ட மாணவரணி செயலாளர் திலக்குமார் உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பிரதமரை சந்திக்க இபிஎஸ், ஓபிஎஸ்சுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை: அண்ணாமலை பேட்டி

சென்னை, ஏப்.8

எடப்பாடி பழனிசாமிக்கும் ஓ.பன்னீர் செல்வத்துக்கும் பிரதமர் மோடியை சந்திக்க பிரதமர் அலுவலகம் அனுமதி கொடுக்கவில்லை என தமிழக பாஜ தலைவர் அண்ணாமலை கூறினார். இதுதொடர்பாக சென்னை விமான நிலையத்தில் அண்ணாமலை நேற்றிரவு அளித்த பேட்டி: பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்ட பாம்பன் புதிய பாலம் பழுது ஆனதாக, மதுரையில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தார்கள்.

அது குறித்து ஒன்றிய அமைச்சரிடம் கேட்ட போது, அப்படி எதுவும் பழுதாகவில்லை என்று கூறினார். தூக்குப்பாலம் எப்படி வடிவமைக்கப்பட்டுள்ளது என்றால், ரயில் கடந்து சென்ற பிறகு, பாலம் மேலே செல்கிறது. ரயில் முழுவதுமாக கடைசி பெட்டி வரை கடந்து சென்ற பிறகுதான், மறுபடியும் அதை இயக்க முடியும். அப்படிதான் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே பாலத்தில் எந்த பிரச்சனையும் இல்லை.



ஓ.பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிசாமி, பிரதமரை சந்திக்க அனுமதி கேட்டிருந்தார்களா என கேட்கிறீர்கள். அது யூகத்தின் அடிப்படையில் வெளியான தகவல் தான். அப்படி எந்த அனுமதியும் கேட்கப்படவில்லை. அவர்களுக்கு பிரதமர் அலுவலகத்திலிருந்து அனுமதியும் கொடுக்கப்படவில்லை. இவ்வாறு அண்ணாமலை கூறினார்.

★ பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்ட பாம்பன் புதிய பாலத்தில் பழுது ஏற்படவில்லை... பாலத்தில் எந்த பிரச்னையும் இல்லை...

# 100 நாள் வேலை திட்டத்துக்கு நிதி தர மறுப்பு ஒன்றிய பாஜ அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்: பொன்குமார் தலைமையில் நடந்தது



சென்னை, ஏப்.8

100 நாள் வேலைத் திட்டத்தில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு சேரவேண்டிய பணத்தை தராத ஒன்றிய மோடி அரசை கண்டித்து விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தை தலைவர் பொன்குமார் தொடங்கி வைத்து பேசுகையில், "தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டுமக்களையும் வஞ்சிக்கின்ற வகையில் தமிழ்நாட்டுக்கு சேர வேண்டிய நிதியை தராமல் வஞ்சகம் செய்து வருகிறது. தொழிலாளர்களின் வயிற்றில் மோடி அரசு அடிக்கிறது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டமானாலும், கல்விக்கு ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டிய நிதியானாலும், இயற்கை பேரிடர் காலங்களில் உதவ வேண்டிய தொகையானாலும் மோடி அரசு தமிழ்நாட்டுக்கு தராமல் வஞ்சிக்கிறது. இதனை வன்மையாக கண்டிக்கிறோம்" என்றார். ஆர்ப்பாட்டத்திற்கு மாநில இளைஞரணி செயலாளர் எம்.சமயசெல்வம் தலைமை தாங்கினார்.

தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் கவிஞர் குருநாகலிங்கம், கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்பின்துணைத் தலைவர் எஸ்.பாலன், அமைப்பு செயலாளர் ஏ.ஜெ.நாகராஜ், மாநில மகளிரணித் துணைத் தலைவர் எஸ்.பசும்பொன், மாவட்டச் செயலாளர் ஏம், வீரகுமார். மாவட்டப் பொருளாளர் ஆர்.ரமேஷ் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வக்பு வாரிய திருத்த மசோதா முஸ்லிம்களை ஓரங்கட்டி சொத்துரிமையை பறிக்கும்: காங்கிரஸ் கண்டனம்



சென்னை, ஏப்.8

வக்பு வாரிய திருத்த மசோதா முஸ்லிம்களை ஓரங்கட்டி சொத்துரிமையை பறிக்கும் என செல்வப்பெருந்தகை கண்டனம் தெரிவித்துள்ளார். தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்ட அறிக்கை: வக்பு திருத்த மசோதா முஸ்லிம்களை ஓரங்கட்டுவதையும் அவர்களின் தனிப்பட்ட சட்டங்கள் மற்றும் சொத்துரிமைகளைப் பறிப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு ஆயுதம் என்பது உறுதியாகியுள்ளது. ஆர்எஸ்எஸ், பாஜ மற்றும் அவர்களது கூட்டாளிகளால் அரசியலமைப்பின் மீதான இந்தத் தாக்குதல் இன்று முஸ்லிம்களை இலக்காகக் கொண்டது. எதிர்காலத்தில் மற்ற சமூகங்களை குறிவைப்பதற்கான ஒரு முன்னுதாரணத்தை அமைக்கிறது.

இந்தச்சட்டம் இந்தியாவின் கருத்தையே தாக்குவதாலும், மத சுதந்திர உரிமையான 25வது பிரிவை மீறுவதாலும் காங்கிரஸ் கட்சி இந்த சட்டத்தை கடுமையாக எதிர்க்கிறது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்தது கிறிஸ்தவர்களை குறிவைக்க திட்டமிட்டுள்ளது தெளிவாகியுள்ளது. சிறுபான்மையினர் மற்றும் விளிம்பு நிலை மக்களை, மோடி அரசின் பாசிச தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க, ராகுல் காந்தியும், மல்லிகார்ஜுன கார்கே தலைமையிலான காங்கிரஸ் பேரியக்கமும் உள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தரமணி 100 அடி சாலையில் தடுப்பில் பைக் மோதி மாணவர் பலி



வேளச்சேரி, ஏப்.8

வேளச்சேரியில் இருந்து தரமணிக்கு கல்லூரி மாணவர் ஓட்டிச் சென்ற பைக் கட்டுப்பாட்டை இழந்து, 100 அடி சாலையின் நடுவில் இருந்த தடுப்பில் மோதி கவிழ்ந்தது. இதில் கல்லூரி மாணவர் படுகாயம் அடைந்து, சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார். இதுகுறத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்தவர் தேவதர்ஷன் (19). இவர், வேளச்சேரியில் தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்து, அங்குள்ள ஒரு தனியார் கல்லூரியில் 3ம் ஆண்டு வணிகவியல் படித்து வந்துள்ளார். இந்நிலையில், நேற்று நள்ளிரவு வேளச்சேரியில் இருந்து 100 அடி சாலை வழியாக தரமணிக்கு பைக்கில் கல்லூரி மாணவர் தேவதர்ஷன் சென்று கொண்டிருந்தார். அப்போது கட்டுப்பாட்டை இழந்த பைக், சாலை நடுவில் இருந்த தடுப்பில் வேகமாக மோதி கவிழ்ந்தது.

இதில் பைக்கிலிருந்து தூக்கி வீசப்பட்ட கல்லூரி மாணவர் தேவதர்ஷன் படுகாயம் அடைந்து, சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார். இதுகுறித்து தகவலறிந்ததும் கிண்டி போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் விரைந்து வந்தனர். அங்கு கல்லூரி மாணவர் தேவதர்ஷனின் சடலத்தை கைப்பற்றி, ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இப்புகாரின்பேரில் போலீசார்வழக்குப்பதிவு செய்து, அப்பகுதி சிசிடிவி காமிரா பதிவுகளை ஆய்வு செய்து விசாரிக்கின்றனர். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது.

# மாமூல் கேட்டு மிரட்டல் அதிமுக வட்ட செயலாளர் கட்சியில் இருந்து நீக்கம்: எடப்பாடி பழனிசாமி நடவடிக்கை



சென்னை, ஏப்.8

சென்னை திருவல்லிக்கேணி பகுதியில் அஜீஸ் பாய் கடை என்ற பெயரில் ஓட்டல் இயங்கி வருகிறது. இந்த ஓட்டலுக்கு வந்த அதிமுக 120வது வட்ட செயலாளர் மூர்த்தி (எ) ஐஸ்அவுஸ் மூர்த்தி (48) என்பவர் கடையின் உரிமையாளரிடம் தினமும் வந்து மாமூல் வாங்கி கொள்ளவா, அல்லது மாதம் மாதம் வந்து மாமூல் வாங்கி கொள்ளவா என்று கேட்டுள்ளார். அதற்கு உரிமையாளர் நாங்கள் ஏன் உனக்கு மாமூல் தரவேண்டும் என்று கூறியுள்ளார். உடனே மூர்த்தி என்னைபகைத்து கொண்டு நீ இங்கு கடை நடத்த முடியாது என்று கூறி ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுத்து விட்டு சென்றுள்ளார்.

இதுகுறித்து கடையின் உரிமையாளர்ஐஸ்அவுஸ் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் படி போலீசார் கடையின் அருகே பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி பதிவுகளை பெற்று ஆய்வு செய்த போது, அதிமுக நிர்வாகி மூர்த்தி மாமூல் கேட்டு தகராறில் ஈடுபடும் காட்சிகள் பதிவாகி இருந்தது. அதைதொடர்ந்து ஐஸ்அவுஸ் போலீசார் அதிமுக 120வது வட்ட செயலாளர் மூர்த்தி (எ) ஐஸ்அவுஸ் மூர்த்தி மீது ஆபாசமாக பேசுதல், மிரட்டி பணம் பறித்தல், கொலை மிரட்டல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து அதிரடியாக நேற்று முன்தினம் கைது செய்தனர். இந்த நிலையில் ஐஸ்ஹவுஸ் மூர்த்தியை கட்சியில் இருந்து எடப்பாடி பழனிசாமிநீக்கியுள்ளார்.

இது தொடர்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்ட அறிவிப்பு: அதிமுகவின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில், கட்சி கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கு களங்கமும் அவப் பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், தென் சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்டம் திருவல்லிக்கேணி கிழக்கு பகுதி 120 தெற்கு வட்ட அதிமுக செயலாளர் ஐஸ்ஹவுஸ் மூர்த்தி கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார். கட்சியினர் யாரும் இவருடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அச்சடிக்கப்பட்ட புதிய புத்தகங்கள் ஜூனில் கிடைக்கும் 1ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை தமிழ் பாடங்கள் குறைப்பு

சென்னை, ஏப்.8

மாணவர்களின் கற்றல் சுமையை குறைப்பதற்காக 1ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை தமிழ்ப் பாடப் புத்தகங்களில் பாடங்களின் அளவை 40 சதவீதம் குறைக்க கல்வித்துறை முடிவு செய்துள்ளது. திருத்திய புத்தகங்கள் ஜூன் மாதம் பள்ளிகளுக்கு வினியோகம் செய்யப்படும் என தெரியவந்துள்ளது. வருகின்ற கல்வி ஆண்டின் தொடக்கத்தில் புதிய திருத்திய தமிழ்ப் பாடப் புத்தகங்கள் வழங்க பள்ளிக்கல்வித் துறை முடிவு செய்துள்ளது.

பாடச்சுமை மற்றும் கற்றல் திறனை அதிகரிக்கும் வகையில் தமிழ்ப் பாடங்களின் அளவை குறைக்கும் நடவடிக்கையில் பள்ளிக் கல்வித்துறை இறங்கியுள்ளது. அதன்படி 1ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்புவரை வரை அனைத்து வகுப்புகளிலும் தமிழ்ப்பாடங்கள் குறைக்கப்படுகிறது. இதற்காக 5 கோடி புதிய தமிழ்ப் பாடப் புத்தகங்கள் அச்சடிக்கும் பணிதற்போதுதொடங்கி இரவு பகலாக நடந்து வருகிறது.

இந்நிலையில் தமிழ்ப் பாடப்புத்தகம் தவிர பிற பாடப்புத்தகங்கள் அச்சடிக்கும் பணி ஏற்கனவே தொடங்கி மே மாதம் பள்ளிகளுக்கு அனுப்பவும் முன்னேற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக தமிழ்ப் பாடப்புத்தகங்கள் அச்சடிக்கப்படும் என்றும் தமிழ்நாடு பாடநூல் கழகம் தெரிவித்துள்ளது. குறிப்பாக பொதுத் தேர்வை சந்திக்கும் 10, 11, 12ம் வகுப்பு மாணவர்களுக்கு 200 பக்கங்கள் மற்றும் அதற்கும் அதிகமாக பாடங்கள் கொண்ட தமிழ்ப் புத்தகங்கள் தற்போது நடைமுறையில் இருக்கின்றன. அவற்றில் தற்போது 40 சதவீதம் குறைக்கப்படுகிறது.

# தொலைதூர படிப்புகளுக்கான அங்கீகாரம் விண்ணப்பிக்கும் கால அவகாசம் நீட்டிப்பு

சென்னை, ஏப்.8

தொலைதூர படிப்புகளுக்கான அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக யுஜிசி தெரிவித்துள்ளது. இதுகுறித்து பல்கலைக்கழகமானியக்குழு (யுஜிசி) செயலர் மணிஷ் ஆர். ஜோஷி வெளியிட்ட அறிவிப்பு: நடப்பு கல்வி யாண்டில் (2025, 26) ஜூன் பருவத்தின் சேர்க்கைக்கான தொலைதூரப் படிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதையடுத்து யுஜிசி ஒழுங்குமுறை விதிகளின் அடிப்படையில் முழுமையான கட்டமைப்பு வசதிகளை கொண்ட உயர்கல்வி நிறுவனங்கள் தொலைத்தூர, இணைய வழியிலான படிப்புகளை கற்றுதர அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம். இதற்கான இணையதள விண்ணப்பப் பதிவு கடந்த மார்ச் 4ல் தொடங்கி ஏப்ரல் 3ம் தேதியுடன் முடிவடைந்தது.

தற்போது பல்வேறு தரப்பின் கோரிக்கைகளை ஏற்று விண்ணப்பிக்கும் கால அவகாசம் ஏப்ரல் 15ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தகுதியான கல்வி நிறுவனங்கள் /deb.ugc.ac.in/ எனும் வலைத்தளம் வழியாக ஏப்ரல் 30ம் தேதிக்குள் டெல்லியில் உள்ள யுஜிசி தலைமை அலுவலகத்தில் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருப்போரூர் வனச்சரகத்தில் விலங்குகளின் தாகம் தணிக்க தொட்டிகளில் குடிநீர்



திருப்போரூர், ஏப்.9

திருப்போரூர் வனச்சரகப் பகுதிகளில் கோடை வெயிலின் உக்கிரத்தில் வன உயிரினங்களின் தாகத்தை தணிக்கும் வகையில், ஆங்காங்கே உள்ள தொட்டிகளில் வனத்துறை சார்பில் குடிநீர் நிரப்பப்பட்டு வருகிறது. இதனால் சாலையைக் கடக்கும் வன உயிரினங்களின் உயிரிழப்பு குறைந்துள்ளது என்று வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கல்பட்டு, மதுராந்தகம், திருப்போரூர் ஆகிய 3 பகுதிகளில் வனச்சரகங்கள் உள்ளன. இவற்றில் செங்கல்பட்டு வனச் சரகத்தில் 7292.69 ஹெக்டேர், திருப்போரூரில் 5613.03 ஹெக்டேர், மதுராந்தகம் வனச்சரகத்தில் 4897.82 ஹெக்டேர் வனப்பகுதிகள் உள்ளது. திருப்போரூர் வனச்சரகத்தில் காட்டூர், செம்பாக்கம், இள்ளலூர், மாம்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள வனப் பகுதிகளில் புள்ளிமான், வெளிமான், முள்ளம்பன்றி, உடும்பு, முயல், மயில், நரி, பறவைகள், பாம்புகள் என பல்வேறு வனஉயிரினங்கள் வாழ்கின்றன.

இவற்றில் மான்கள், கோடை வெப்பத்தின் உக்கிரத்தை தணிக்க அடிக்கடி குடிநீர் தேடி செம்பாக்கம், இள்ளலூர், மடையத்தூர் ஏரிகளுக்கு வருகின்றன. இவ்வாறு அவை வரும்போது சாலையை கடக்க வேண்டி இருப்பதால், அவற்றில் பல வாகனங்களில் அடிபட்டு இறக்கின்றன. இதைத் தொடர்ந்து திருப்போரூர் வனச்சரக அலுவலர் பொன்.செந்தில் உத்தரவின்பேரில், கடந்த சில நாட்களாக டிராக்டர்கள் மூலம் காலை, மாலை என இரு வேளைகளிலும் மான்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள குட்டைகள், தண்ணீர் தொட்டிகளில் வனத்துறை ஊழியர்கள் குடிநீரை நிரப்பி வருகின்றனர். இவ்வாறு வன உயிரினங்களுக்கு இரு வேளைகளிலும் தண்ணீர் ஊற்றப்படுவதால், அவை குடிநீர் தேடி சாலையை கடந்து ஏரிகளுக்கு சென்று வருவதும், வாகனங்களில் அடிபட்டு இறப்பதும் வெகுவாக குறைந்துள்ளன என்று வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சென்னை பிரஸ் கிளப் உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.2.5 கோடி வழங்கப்படும்: துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்




சென்னை, ஏப்.8

சென்னை பிரஸ் கிளப் உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.2.5 கோடி வழங்கப்படும் என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ளார். சென்னை பிரஸ்கிளப்நிர்வாகிகள் முதலமைச்சரை சந்தித்து வாழ்த்து பெற்ற போது கோரிக்கைகளை முன்வைத்தனர். "சென்னை பிரஸ் கிளப் நிர்வாகிகளின் கோரிக்கையை ஏற்று தற்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என துணை முதல்வர் உதயநிதி தெரிவித்துள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

8.4.2025

# சமயபுரம் மாரியம்மன் கோயிலில் சித்திரை திருவிழா துவக்கம்: 15ம் தேதி தேரோட்டம்



மண்ணச்சநல்லூர், ஏப்.8

சமயபுரம் மாரியம்மன் கோயிலில் சித்திரை திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் துவங்கியது. வரும் 15ம் தேதி தேரோட்டம் நடக்கிறது. திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயிலில் இந்தாண்டு சித்திரை திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. அம்மன் சிறப்பு அலங்காரத்தில் கேடயத்தில் புறப்பாடாகி கொடிமரம் முன் எழுந்தருளினார்.

தொடர்ந்து கொடியேற்றம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர். திருவிழா நாட்களில் ஒவ்வொரு நாளும் காலையில் அம்மன் பல்லக்கில் எழுந்தருளி கோயிலை வலம் வருகிறார். அதே போல் தினமும் இரவு 8 மணிக்கு சிம்ம வாகனம், பூத வாகனம், அன்ன வாகனம், ரிஷப வாகனம், யானை வாகனம், சேஷ வாகனம், மரக்குதிரை வாகனம் என ஒவ்வொரு வாகனத்தில் எழுந்தருளி, கோயிலை வலம் வந்து பக்தர்களுக்கு காட்சி அளிக்க உள்ளார். வருகிற 14ம் தேதி அம்மன் வெள்ளிக்குதிரை வாகனத்தில் எழுந்தருளி வையாளி கண்டருளும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 15ம் தேதி நடைபெறுகிறது. அன்று காலை 10.31மணிக்கு மேல் 11.30 மணிக்குள் தேர் வடம் பிடித்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. 16ம் தேதி வெள்ளி காமதேனு வாகனத்திலும், 17ம் தேதி முத்துப்பல்லக்கிலும் அம்மன் புறப்பாடாகிறார். 18ம் தேதி மாலை அம்மனுக்கு அபிஷேகமும், இரவு 7 மணிக்கு வசந்தமண்டபத்தில் தெப்ப உற்சவ தீபாராதனையும் நடைபெறுகிறது. தேரோட்டம் முடிந்து எட்டாம் நாளான 22ம் தேதி இரவு அம்மன் தங்கக்கமல வாகனத்தில் புறப்படுகிறார்.

# கொடைக்கானலில் மன்னவனூர் பூங்கா மீண்டும் திறப்பு



கொடைக்கானல், ஏப்.8

கொடைக்கானல் மன்னவனூர் சூழல் சுற்றுலா பூங்கா பராமரிப்பு பணிகள் நிறைவடைந்து மீண்டும் திறக்கப்பட்டதால் சுற்றுலாப்பயணிகள் மகிழ்ச்சியடைந்தனர். திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் வனத்துறை கட்டுப்பாட்டில் பல்வேறு சுற்றுலா தலங்கள் உள்ளன. இதில் மிக முக்கியமான மற்றும் சுற்றுலாப்பயணிகள் அதிகமாக பார்வையிடும் இடமாக மன்னவனூர் சூழல் சுற்றுலா பூங்கா உள்ளது. கொடைக்கானலில் இருந்து சுமார் 35 கிமீ தொலைவில் உள்ள மன்னவனூர் ஏரியின் அருகில் இந்த பூங்கா அமைந்துள்ளது. பார்வையாளர்கள் நுழைவு கட்டணம் செலுத்தி இப்பகுதிக்கு செல்ல வேண்டும். இந்த பகுதி ஜிப் ரோப் சாகச விளையாட்டுக்கும் பிரபலமான இடமாக உள்ளது.

மேலும் மன்னவனூர் ஏரியில் பரிசல் சவாரி, ஏரியை சுற்றி குதிரை சவாரி செய்யவும் சுற்றுலா பயணிகள் அதிகம் விரும்புவர். இங்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வனத்துறை முடிவு செய்தது. இதன் காரணமாக கொடைக்கானல் வனச்சரக மாவட்ட வன அலுவலர் யோகேஷ் குமார் மீனாவின் உத்தரவுப்படி மன்னவனூர் சூழல் பூங்கா கடந்த ஏப்.1ம் தேதி முதல் நேற்று முன்தினம் வரை மூடப்பட்டு பார்வையாளர்கள் அனுமதிக்கப்படாமல் இருந்தது. இந்நிலையில், பராமரிப்பு பணிகள் முடிவடைந்து நேற்று பூங்கா மீண்டும் திறக்கப்பட்டது. இதையடுத்து அங்கு வந்திருந்த சுற்றுலாப்பயணிகள் பூங்காவை கண்டு ரசித்தனர். மேலும் ஏரியில் படகு சவாரி மற்றும் குதிரை சவாரி செய்து மகிழ்ந்தனர்.

# 1 கிராம் 2,500 ரூபாய்.. குறிவைக்கப்படும் கோவை IT இளைஞர்கள்.. போதைப் பொருள் கும்பலை கைது செய்த போலீஸ்.



கோவை, ஏப்.8

கோவையில் IT ஊழியர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களை குறிவைத்து உயர் ரக போதைப் பொருளான மெத்தபெட்டமைன் போதைப் பொருளை விற்பனை செய்த கும்பலை காவல் துறையினர் கைது செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் போதைப் பொருள்கள் விற்பனை மற்றும் புழக்கம் மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மெத்தபெட்டமைன் போதைப் பொருள், கஞ்சா, கஞ்சா ஆயில், கஞ்சா சாக்லேட், போதை ஊசி, போதை மாத்திரைகள் என பல்வேறு வகையிலான போதைப் பொருள்கள் சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

கோவை மாவட்டத்தில் புறநகர்ப் பகுதிகளில் உள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள், ஐடி இளைஞர்கள் உள்ளிட்டோரை குறிவைத்து போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனைத் தடுக்கும் வகையில் கோவையில் புறநகர்ப் பகுதிகள் மற்றும் வாடகைக்கு தங்கியிருக்கும் மாணவர்கள், இளைஞர்களின் அறைகள், விடுதிகள் போன்றவற்றில் போலீஸார் அடிக்கடி அதிரடி சோதனை மேற்கொண்டு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனாலும், கோவையில் போதைப் பொருள் கும்பலின் அட்டூழியம் குறைந்தபாடில்லை. இதனால், பல்வேறு குற்ற நடவடிக்கைகளில் இளைஞர்கள் ஈடுபடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கூட கோவைக்கு ராஜஸ்தானில் இருந்து ரயில் மூலம் போதை மாத்திரைகளை கடத்தி விற்பனை செய்து வந்த கும்பலைச் சேர்ந்த நான்கு பேரை காவல் துறையினர் அதிரடியாக கைது செய்தனர். அந்த கும்பலிடம் இருந்து 1,556 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கோவை மாநகர காவல் துறையினருக்கு போதைப் பொருள்விற்பனைகுறித்து ரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, கோவை மாநகர காவல் ஆணையர் சரவண சுந்தர் உத்தரவின் பேரில், கோவை மாநகர காவல் துணை ஆணையர் உதயகுமார் தலைமையில், துணை ஆணையர், தனிப்படை போலீஸார், கோவை மாநகர மதுவிலக்கு பிரிவு போலீஸார் இணைந்து நேற்று சுமார் மாலை கோவை காந்திபுரம் பஸ் ஸ்டாண்டிற்குள் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, பேருந்து நிலையத்திற்குள் உள்ள பொதுக் கழிப்பிடம் அருகில் வைத்து மெத்தபெட்டமைன் எனும் போதைப் பொருளை விற்பனை செய்து வந்த கோவை, ராமநாதபுரம் புளியகுளம் அம்மன் குளத்தைச் சேர்ந்த கோபிநாத் (27) மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த மிதலாஜ் ,விக்னேஷ்,அஜித், ஆகியோரை போலீஸார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து மொத்தம் சுமார் 6 லட்சம் ரூபாய் மதிப்பிலான 195 கிராம் மெத்தப்பட்டமைன் போதைப் பொருள் மற்றும் பணம் 15,500 ரூபாய், செல்போன்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. கைது செய்யப்பட்ட நபர்கள் மீது மதுவிலக்கு போலீசார் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தனர்.

பெங்களூரில் இருந்து மொத்தமாக மெத்தபெட்டமைன் போதை பொருளை வாங்கி இங்கு வந்து விற்பனை செய்து வந்தது போலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர்கள் மீது ஏற்கனவே விசாகப்பட்டினம் மற்றும் கோவையில் கஞ்சா வழக்கு உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அகில இந்திய விவசாய அமைப்பின் சார்பாக பாரத பிரதமர் நரேந்திர மோடி ஜிக்கு அகில இந்திய விவசாய அமைப்பின் சார்பாக பாராட்டு



அகில இந்திய விவசாய அமைப்பின் சார்பாக பாரத பிரதமர் நரேந்திர மோடி ஜி அவர்களுக்கு அகில இந்திய விவசாய அமைப்பின் சார்பாக பாராட்டு 1914 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பழைய பாலத்தை புதுப்பிக்க நலத்திட்டங்களை வாரி வழங்கி தமிழகத்தில் நாட்டின் நலனை கருதி தமிழ்நாட்டு மக்களுக்காக இரவும் பகலும் பார்க்காமல் உழைத்துக் கொண்டிருக்கின்ற பிதா பிதாமகன் அவர்களுக்கு பாராட்டுக்கள் தரைவழி போக்குவரத்து சாலை போக்குவரத்து அனைத்து மாநிலங்களிலும் நலத்திட்டங்களை வழங்கி நாட்டின் உடைய வளர்ச்சி தான் முக்கியம் என கருதி இருக்கின்ற பாரத பிரதமர் பிதாமகன் நரேந்திர மோடி ஜி அவர்களுக்கு அகில இந்திய விவசாய அமைப்பின் சார்பாக தென்னிந்திய ஒருங்கிணைப்பாளர் & தமிழ்நாடு மாநில தலைவர் திரு முத்துகிருஷ்ணன் அவர்கள் பாரதப் பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி ஜி அவர்களுக்கு பாராட்டி வாழ்த்து கூறினார் மதுரையில் செய்தியாளரை சந்தித்து சிறப்பு பேட்டி வழங்கினார்

# நடிகர் மணிகண்டன் குறித்து 'குடும்பஸ்தன்' நடிகை உருக்கம்



தமிழில் மணிகண்டன் நடிப்பில் கடந்த ஜனவரி மாதம் 24ந் தேதி வெளியான படம் 'குடும்பஸ்தன்'. இப்படத்தை சினிமாக்காரன் நிறுவனம்தயாரிப்பில்நக்கலைட்ஸ்யூடியூப்இயக்குனர்ராஜேஷ்வர் காளிசாமி இயக்கியிருக்கிறார். இந்த படத்தில் மணிகண்டனுக்கு ஜோடியாக சான்வி மேக்னா நடித்திருந்தார்.

இப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில், 'குடும்பஸ்தன்' படம் மூலம் பேன்ஸ் கவனத்தை ஈர்த்த சான்வி மேக்னா, நடிகர் மணிகண்டன் குறித்து உருக்கமான பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்,

"உங்களைப்போல திறமை வாய்ந்த நடிகரோடு பணிபுரிந்தது ஓர் அழகான அனுபவம். 'குடும்பஸ்தன்' படம் மூலம் அருமையான இணை நடிகர் மட்டுமன்றி சிறந்த நண்பரும் கிடைத்திருக்கிறார்" என்று தெரிவித்திருக்கிறார்.

# சரிந்து விழுந்த அஜித்தின் 200 அடி உயர அவுட் வீடியோ வைரல்



அஜித் நடிப்பில் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'குட் பேட் அக்லி' திரைப்படம் வெளியாக இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில் படத்தின் மீதான ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு அதிகரித்துக்கொண்டே போகிறது. மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்திற்கு இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இப்படம் வருகிற ஏப்ரல் 10ம் தேதி வெளியாக உள்ளது. இந்த படத்தில் அஜித்துடன் இணைந்து திரிஷா, பிரசன்னா, சுனில், அர்ஜுன் தாஸ், பிரபு உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர்.

இந்நிலையில், குட் பேட் அக்லி திரைப்படத்தின் ரிலீஸையொட்டி, திரையரங்குகளின் முன் அஜித் கட் அவுட் வைக்கும் பணிகளில் ரசிகர்கள் ஈடுபட்டுள்ளனர். அந்தவகையில், நெல்லையில் சுமார் 200 அடி உயரத்திற்கு அஜித் கட் அவுட் வைக்கும் பணி நடைபெற்றது. அப்போது அந்த கட் அவுட் திடீரென சரிந்து விழுந்தது.

அப்போது ரசிகர்கள் பதறியடித்து ஓடிய வீடியோ சமூக வளைதளங்களில் வைரலாகி வருகிறது. இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என தகவல் வெளியாகி இருக்கிறது.

# சுப்மன் கில் அதிரடி... ஐதராபாத்தை வீழ்த்தி குஜராத் டைட்டன்ஸ் வெற்றி



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் ஐதராபாத்தில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற குஜராத் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் அணிக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை. டிராவிஸ் ஹெட் 8 ரன்களிலும், அபிஷேக் சர்மா 18 ரன்களிலும் சிராஜ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். அவர்களை தொடர்ந்து களமிறங்கிய இஷான் கிஷனும் நீண்ட நேரம் தாக்கு பிடிக்கவில்லை. 17 ரன்களில் அவுட்டானார்.

இதன்பின் ஜோடி சேர்ந்து அணிக்கு வலுசேர்த்த நிதிஷ் ரெட்டி கிளாசென் இணை 50 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் பிரிந்தது. கிளாசென் 27 ரன்களில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்திலேயே நிதிஷ் ரெட்டியும் 31 ரன்களில் சாய் கிஷோர் பந்துவீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார். அதிரடிக்கு பெயர் போன ஐதராபாத் அணி இந்த சீசனில் தொடர்ந்து பேட்டிங்கில் சொதப்பி வருகிறது. அது இந்த போட்டியிலும் தொடர்ந்தது.

இறுதி கட்டத்தில் கம்மின்ஸ் அதிரடியாக விளையாடி 22 ரன்கள் (9 பந்துகள்) அடித்தார். இதன் மூலம் ஐதராபாத் அணி ஓரளவு நல்ல நிலையை எட்டியது. இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் ஐதராபாத் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 152 ரன்கள் அடித்தது. குஜராத் தரப்பில் அதிகபட்சமாக சிராஜ் 4 விக்கெட்டுகளும், சாய் கிஷோர் மற்றும் பிரசித் கிருஷ்ணா தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதையடுத்து 153 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் அணி களமிறங்கியது. அந்த அணியில் தொடக்க வீரராக களமிறங்கிய சாய் சுதர்சன் 5 ரன்களில் அவுட்டானார். அடுத்து வந்த ஜோஸ் பட்லர் டக் அவுட்டானார். அடுத்து ஜோடி சேர்ந்த சுப்மன் கில், வாஷிங்டன் சுந்தர் இருவரும் அதிரடியாக விளையாடி அணியின் ஸ்கோரை உயர்த்தினர். 49 ரன்கள் எடுத்திருந்த நிலையில் வாஷிங்டன் சுந்தர் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் 16.4 ஓவர்கள் முடிவில் குஜராத் டைட்டன்ஸ் அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 153 ரன்கள் எடுத்தது. இதன்மூலம் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஐதராபாத் அணியை வீழ்த்தி குஜராத் அணி வெற்றி பெற்றது. சுப்மன் கில் அரைசதம் கடந்து 61 ரன்களுடனும், ஷெர்பேன் ரூதர்போர்டு 35 ரன்களுடனும் அவுட்டாகாமல் இருந்தனர்.

# பெரிய நடிகர்களின் படங்களை மட்டுமே ஆதரிப்பதா? சமுத்திரகனி ஆதங்கம்



சினிமாவில் உதவி இயக்குனராக தனது பயணத்தை தொடங்கிய சமுத்திரகனி, தனது நண்பர் சசிகுமார் இயக்கத்தில் உருவான 'சுப்ரமணியபுரம்' படத்தின் மூலமாக நடிகர் ஆனார். தற்போது நடிகராக தமிழிலும், தெலுங்கிலும் அசத்தி வருகிறார். மேலும் சமுத்திரகனி 'நாடோடிகள்', 'போராளி', 'நிமிர்ந்து நில்', 'அப்பா' போன்ற படங்களை இயக்கியுள்ளார்.

இதற்கிடையில் சமுத்திரகனி தனது சினிமா அனுபவங்கள் பற்றி பகிர்ந்துள்ளார். அவர் கூறுகையில், 'அப்பா', 'சாட்டை' போன்ற திரைப்படங்கள் உடனடியாக ரசிகர்களிடம் சென்று சேர்ந்துவிடாது. பெரிய நடிகர்களின் படம் என்றால் ரசிகர்கள் முதல் காட்சிக்கு முண்டியடிப்பார்கள். ஆனால் தரமான, நல்ல படங்களுக்கு வருவது கிடையாது.

இந்த மாதிரியான படங்களை தாமதமாக டி.வி.யில் பார்த்துவிட்டு 'நல்லாதான் இருக்கு' என சொல்லிவிட்டு போய்விடுவார்கள். ஆனால், இது போன்ற படங்களுக்கு பின்னால் இருக்கும் உழைப்பு மிகப்பெரியது. கிட்டத்தட்ட நான் 7 ஆண்டுகள் சேர்த்து வைத்திருந்த காசை வைத்துதான் 'அப்பா' படத்தை எடுத்தேன். ஆனால், படம் எனக்கு நஷ்டத்தை கொடுத்தது என்பதுதான் உண்மை, என்று கூறினார்.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: பெங்களூரு எப்.சி. அணி இறுதிப்போட்டிக்கு தகுதி



11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டியில், நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதியின் 2வது சுற்றில் எப்.சி. கோவா அணி, முன்னாள் சாம்பியன் பெங்களூரு எப்.சி.யை எதிர்கொண்டது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கோவா அணி 21 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கோவா அணியில் போர்ஜா ஹெரேரா, அர்மான்டோ சாதிகு கோல் போட்டனர். பெங்களூரு அணியில் கேப்டன் சுனில் சேத்ரி கடைசி நிமிடத்தில் கோல் அடித்தார்.

இதன் முதலாவது சுற்றில் பெங்களூரு அணி 20 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது. இதனால் கோல் வித்தியாசத்தின் அடிப்படையில் பெங்களூரு அணி (32) கோவாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. பெங்களூரு அணி இறுதி ஆட்டத்தை எட்டுவது இது 4வது முறையாகும்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.